இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அக்காலத்தில் மக்கள் மீட்பரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை யோவான் மெசியாவாக இருப்பாரோ என்று எல்லாரும் தங்களுக்குள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். யோவான் அவர்கள் அனைவரையும் பார்த்து, “நான் தண்ணீரால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கிறேன்; ஆனால் என்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார். (லூக்கா 3:15-16)

# சைப்பிரஸ் மற்றும் கிரீஸ் நாடுகளுக்கு திருத்தூதுப்பயணம் மேற்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்

**வத்திக்கான்:** திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சைப்பிரஸ் குடியரசிற்கும், கிரீஸ் நாட்டிற்கும் தமது 35வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணத்தை மேற்கொண்டார். கடந்த 2, டிசம்பர் தொடங்கி 6-ம் திகதி வரை நடைபெற்ற நிகழ்வுகளில் திருந்தந்தை வெவ்வேறு பிரிவிலான மக்களைச் சந்தித்து உரையாடினார்.

சைப்ரஸ், கிரீஸ் ஆகிய இரு நாடுகளிலும் ஆர்த்தடாக்ஸ் சபையைச் சேர்ந்தோர் பெருமளவில் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கத்தோலிக்கத் திருஅவையும், பல்வேறு ஆர்த்தடாக்ஸ் சபைகளும், கருத்தளவில் வேறுபட்டிருந்தாலும், அண்மைய ஆண்டுகளில், இச்சபைகள் இணைந்து, பிறரன்புப் பணிகளை ஆற்றிவருவது கிறிஸ்தவ ஒன்றிப்பு என்ற இலக்கை நோக்கி மேற்கொண்டுள்ள பயணத்தின் ஒரு முக்கிய மைல்கல் எனலாம்.

என்பதால், கத்தோலிக்கர்கள் சார்பில் மன்னிப்பு கேட்டார்

கடவுள், எப்போதுமே, மன்னிப்பதற்கும், தன் கருணையைப் பொழிவதற்கும் தயாராக இருக்கிறார், ஆனால், நாமோ, மன்னிப்பு கேட்பதில் சோர்வடைகிறோம் என்பதை, இச்சந்திப்பில் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, மன்னிப்பு கேட்கும் பணிவு இன்றைய உலகில், அனைத்து தளங்களிலும் தேவைப்படும் ஒரு பண்பு என்று கூறினார்.
மேலும், இன்றைய காலக்கட்டத்தில் பல்வேறு நாடுகளில் குடியரசு என்ற உன்னத விழுமியம் சிதைந்துவருவது குறித்து தன் கவலையை வெளியிட்ட திருத்தந்தை, 'மக்களை முன்னிறுத்தும் கொள்கை' என்ற பெயரிலும், 'பெருமளவு மக்களின் விருப்பம்' என்ற பெயரிலும் திணிக்கப்படும் அடக்குமுறை, குடியரசுக்கு எதிரான ஆபத்து என்பதையும் விளக்கிக் கூறினார்.



## ஆர்த்தடாக்ஸ் சபையினரிடம் மன்னிப்பு

ஆர்த்தடாக்ஸ் சபை முதுபெரும் தந்தை, எரோனிமுஸ் அவர்களுடன் மேற்கொண்ட சந்திப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கத்தோலிக்க திருஅவையின் சார்பில் மன்னிப்பு கேட்டது குறித்தும், ஆர்த்தடாக்ஸ் சபைகளுடன் இணைந்து நடத்தக்கூடிய சந்திப்புகள் குறித்தும் செய்தியாளர்கள் எழுப்பியக் கேள்விக்கு திருத்தந்தை விளக்கம் அளித்தார்.

கிரீஸ் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், அங்கு வாழ்ந்த கத்தோலிக்கர்கள் அங்கிருந்த ஆர்த்தடாக்ஸ் சபையினருடன் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பதை எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவ்வேளையில், ஐரோப்பிய அரசுகளுடன் ஏனைய கத்தோலிக்கர்கள் இணைந்து, இந்த சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்தனர்

குடியேற்றம் குறித்து எழுந்த கேள்விக்கு பதில் அளித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் அனைவருமே இவ்வுலகில் குடியேறியவர்கள் என்பதையும், நாம் குடியேறிய வேளையில், அந்தந்த நாட்டில் நம்மையே இணைத்துக் கொள்ளும் முயற்சிகள் செய்ததை மறந்துவிட்டு, தற்போது, பல்வேறு நாடுகள் குடியேற்றத்தாரரைத் தடுக்க சுவர்கள் எழுப்புவது முரண்பாடாக தெரிகிறது என்று கூறினார்.

மேலும், கிரீஸ் ஆர்த்தடாக்ஸ் முதுபெரும் தந்தை இரண்டாம் எரோனிமுஸ் அவர்களுடன் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இப்பயணத்தின் போது கலந்துரையாடினார். அவ்வேளையில் திருஅவையில் நிகழ்ந்த பிரிவுக்காக தாம் வருந்துவதாகவும் திருத்தந்தை தெரிவித்தார்.

# பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் திருவருகைக்கால செய்தி

கிறிஸ்துவில் என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, நான் கடந்த சனிக்கிழமை மாலையில், மிகுந்த நம்பிக்கையுடனும், ஒளிகொண்ட உள்ளத்துடனும் எனது திருவருகைக்காலத்தைத் தொடங்கினேன். கடந்த ஆண்டு இறந்த, வீடற்ற மாமனிதர் அம்ரானின் வாழ்க்கையை எங்களில் சிலர் நினைவுகூர்ந்தோம். அவர் 40 ஆண்டுகளுக்கும் மேலாக வீதிகளில் வாழ்ந்தார். அவர் எங்கள் இளைஞர்கள் மற்றும் இரவில் தெருக்களில்



நடமாடுபவர்களின் வாழ்க்கையை மிகவும் தொட்டவராவார். அம்ரான் எங்கள் வாழ்வுக்கு உணர்ந்திய கதைகளை எங்களில் பகிர்ந்து கொண்டோம். அவரைப் போலவே இதர வீடற்றவர்களுக்கும் தனி விருப்பங்களும் தேவைகளும், மாண்பும், கண்ணியமும் இருப்பதை அவர் எங்களுக்குக் கற்றுத் தந்தார். அவர்களும் இந்த வாழ்க்கைப் பயணத்தில் இணை பயணிகள் ஆவர்.

இந்த டிசம்பரில், கிறிஸ்துமஸ் பெருவிழாவை எப்படிக் கொண்டாடப் போகிறோம் என்பது பற்றிய நம்பிக்கை மேலெழுந்தவாரியாக இருந்தது. சிங்கப்பூருடனான விமானப் போக்குவரத்து நுழைவில், தடுப்பூசி ஏற்றோருக்கான சிறப்பு வழிகள் திறக்கப்படவுள்ளதால், எத்தனைபேர் தங்கள் குடும்பங்களோடு இணையப்போகிறார்கள்! இந்த திருவருகைக்காலம் வழக்கமாக கொணரும் எதிர்ப்பார்ப்பு இந்த பயணத்திலும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஆனாலும், திருவருகைக்காலம் என்றாலே காத்திருக்கும் காலம்தான். உலக மீட்பரின் பிறப்புக்காக ஒரு தாழ்ச்சியான தொழுவத்தில் காத்திருக்கும் போது, அந்த அரசக் குழந்தையை வரவேற்க, நாம் காத்திருக்க வேறு காரணங்களும் உண்டு.

1. ஒருவேளை இங்கு ஓமிக்ரான் கிருமியின் முதலாவது கண்டுபிடிக்கப்பட்டு எப்போது அறிவிக்கப்படும் என்று நாம் காத்திருக்கிறோமா?

2. அல்லது நாம் கோவிட் தொற்றிலிருந்து விடுபட நமது PCR சோதனையின் முடிவுகளுக்காக காத்திருக்கிறோமா?

நாம் வெறுமனே காத்திருக்கவில்லை, நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம். இந்த தொற்று நோயை நம்மால் சமாளிக்க முடியும் என்று நாம் நம்புகிறோம். மேலும் தமது வாழ்வு மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பக்கூடும் என்றும் காத்திருக்கிறோம்.

இந்த திருவருகைக்காலம் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும், உலகத்திலும், நம் இதயங்களிலும் அமைதியின் இளவரசரின் பிறப்பிற்குத் தயாராகும் ஓர் அருள் நிறைந்த வாய்ப்பாக இருக்க வேண்டும் என்று நான் இறைவனை இறைஞ்சுகிறேன்.

*தமிழாக்கம் : ஆர்.கே*

# பில்லிங்ஸ் கருவுறா இயற்கைமுறை ஆசிரியர்கள் - இறைவாக்கினர்கள்

**கோலாலம்பூர் :** தேசிய கருவுறா இயற்கைமுறை விழிப்புணர்வு மன்றத்தின் 19-வது கருத்தரங்ம் கடந்த நவம்பர் 27, 28 மற்றும் டிசம்பர் 4,5 ஆகிய நாள்களில் இயங்கலை வழி நடந்தேறியது. இக்கருத்தரங்கில் தீபகற்ப மலேசியா, சரவாக் மற்றும் சபாவிலிருந்து கருவுறா இயற்கைமுறை விழிப்புணர்வு ஆசிரியர்கள் 101 பேரும் பார்வையாளர்களாக 25 பேரும் கலந்துகொண்டனர்.

தமது தேசிய கருவுறா இயற்கைமுறை விழிப்புணர்வு மன்றமானது, உலக அளவில் செயல்படும் பில்லிங்ஸ்



கருவுறா இயற்கைமுறை கழகத்தின் ஓர் அங்கமாக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. திருமணத்திற்குத் தயாராகும் தம்பதியர், பெண்கள் கருவுறக்கூடிய கால வட்டத்தைக் குறித்து வைத்து, இயற்கையாக கருவுறுதலை ஏற்கவோ அல்லது தவிர்க்கவோ கற்பிக்கிற பணியை இம்மன்றம் ஏற்று நடத்தி வருகிறது. பில்லிங்ஸ் கருவுறா இயற்கைமுறையானது, இலகுவாக தம்பதியர் குழந்தைபேறு வாய்ப்பையும் உடல்நலத்தையும் பேணிகாக்க உதவுகிறது.

மேற்கண்ட கருத்தரங்கை கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் திறந்து வைத்து வரவேற்புரையாற்றினார். அவர்தம் உரையில், பில்லிங்ஸ் கருவுறா இயற்கைமுறையைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் உண்மையில் தம்பதியர்கள் பொறுப்புள்ள மற்றும் கடவுளின் திட்டத்திற்கு உட்பட்டு செயல்படும் பெற்றோர்கள் உருவாக்கும் பணியில் ஈடுபடுவது குறித்து தாம் பெருமிதம் கொள்வதாக தெரிவித்தார்.

தொடர்ந்து, இக்கருத்தரங்கு தலைவர் அருட்சகோதரர் (Bro) Gerard Choo, SJ அவர்கள், "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்; மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்." (எரே 1:5) என்ற இறைவார்த்தையோடு தலைமையுரையாற்றி கருத்தரங்கைத் தொடக்கி வைத்தார்.

இது கத்தோலிக்கத் திருஅவையின் அங்கீகாரத்தைப் பெற்ற இயற்கையான செயல்முறை என்பதால், கத்தோலிக்க தம்பதியர் இம்முறையைக் கற்றறிந்து, அதற்கேற்ப திட்டமிடுவது சாலச் சிறந்தது. உலகப் போக்கிலான கருக்கலைத்தல் செயல்பாட்டை இதனால் தவிர்க்க முடியும்.

# பேணிக்காக்கும் கலாச்சாரத்தை வளர்க்கவேண்டும் திருத்தந்தை

**வத்திக்கான்:** கனிவுள்ள மனம் என்பது, வெறும் கருத்தளவு சிந்தனை அல்ல, மாறாக, அது, மக்களின் துயரங்களில் பங்கேற்று, அவர்களுடன் நம் அருகாமையை வெளிப்படுத்தும் செயல்பாடு என்றும், இந்த அருகாமை, அவர்களது வாழ்வில் நாம் பங்கேற்பது, அவர்கள் துயர்களைத் துடைப்பது என்ற பல வடிவங்களில் வெளிப்படுகிறது என்றும், இத்தாலிய சமுதாய மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் பணிகளைப் பாராட்டிய நிகழ்வில் திருத்தந்தை பிரான்சிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

கனிவு கலாச்சாரத்தை வளர்ப்பதன் ஒரு முக்கிய அம்சமாக,



குழந்தைகள், வயதில் முதிர்ந்தவர்களோடு பழகுவதற்கு வாய்ப்புக்களை உருவாக்குவது அவசியம் என்பதையும், இந்தக் கலாச்சாரம் மனிதத்தை இவ்வுலகில் வாழவைக்கும் என்பதையும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.

மனிதர்களை பேணிக்காக்கும் கலாச்சாரத்தை, குறிப்பாக, விளிம்புகளில் வாழ்வோரை பேணிக்காக்கும் கலாச்சாரத்தை, நாம் மீண்டும் கண்டுகொள்வதன் வழியே, உண்மையான மாற்றங்களை இவ்வுலகில் உருவாக்கமுடியும் என்றும், இந்த சமுதாயம், பண்புள்ள ஒரு சமுதாயமாக மாறும் என்றும், திருத்தந்தை சில மாதங்களுக்கு முன், மருத்துவமனையில் இருந்த நேரத்தை நினைவுகூர்ந்து, தன்னைப் பராமரித்தவர்களுக்கு நன்றி கூறிய அதேவேளை, பொதுவாக மருத்துவத் துறையில், இன்னும் மனிதநேயத்துடன் கூடிய பராமரிப்பு கலாச்சாரம் வளரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

# எதிர்நோக்கிலும் அன்பிலும் புனித பிரான்சிஸ் சவேரியாரின் அரிச்சுவடியைப் பின்பற்றுவோம்

**பினாங்கு:** நாடு முழுவதும் கோவிட்-19 தொற்றின் காரணமாக அரை வருடத்திற்கும் மேலாக மூடப்பட்ட பிறகு, புனித பிரான்சிஸ் சவேரியார் பங்கு (சிட்டி பாரிஷ்) அதன் பாதுகாவலரின் திருவிழாவைக் கொண்டாடும் வகையில் மீண்டும் திறக்கப்பட்டது. கடந்த டிசம்பர் 3 முதல் 5 வரை, 'புனித பிரான்சிஸ் சவேரியாரே, எங்களை இந்த தொற்றுக் காலத்தில் மறைப்பரப்புக்கான எதிர்நோக்கு மற்றும் அன்பை நோக்கி வழிநடத்தும்' எனும் கருப்பொருளில் கொண்டாடப்பட்டது.





இத்திருவிழாக் கொண்டாட்டக் காலத்தில் சிரம்பான், புனித மினவுதல் அன்னை பங்கின் பங்குத்தந்தை அருள்பணி சேவியர் என்ரூ அவர்கள் முதன்மை அருள்பணியாளராக மறையுரையாற்றி திருப்பலிகளைக் கொண்டாடினார். டிசம்பர் 5-ஆம் திகதி, அருள்பணி சேவியர் என்ரூ அவர்கள் பங்குத் தந்தை Msgr அலோசியஸ் தான் மற்றும் ஓய்வுப் பெற்ற ஆயர் மேதகு அந்தோணி செல்வநாயகம் அவர்களுடன் இணைந்து கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றினார். "கிறிஸ்தவர்களாகிய நாம், நமது தனிப்பட்ட பணியின் ஒரு பகுதியாக, நம்மைச் சூழ்ந்துள்ளவர்களின் நற் குணங்களைப் பாராட்டி, நம்மில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து, இந்த திருவருகைக்காலத்தில் அனைத்தையும் சீர்செய்வோம் என்று சேவியர் என்ரூ அவர்கள் அறிவிறுத்தினார்.

# மாற்றுத்திறன் கொண்டோர்!



இன்றைய உலகில் வாழும் நூறு கோடிக்கும் அதிகமான மாற்றுத் திறனாளிகளில், 80 விழுக்காட்டினர், வளரும் நாடுகளைச் சார்ந்தவர்கள் என்றும், உலகெங்கிலும், உள்ள மாற்றுத்திறனாளிகளில், 46 விழுக்காட்டினர், 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் என்றும் ஐ.நா.வின் புள்ளி விவரம் கூறுகிறது.

# அகமகிழ்ந்து ஆர்ப்பரிப்போம்! ஆண்டவர் வருகிறார்!

ஆர்ப்பரியுங்கள், ஆரவாரம் செய்யுங்கள், அகமகிழ்ந்து அக்களியுங்கள்! திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறான இந்த ஞாயிறை திருஅவை மகிழ்ச்சியின் ஞாயிராகக் கொண்டாடப் பணிக்கின்றது. இந்த நாளில் நாம் வாசிக்கக் கேட்கும் வாசகங்கள் அனைத்தும் 'மகிழ்ச்சி, அக்களிப்பு' போன்ற வார்த்தைகளைத்தான் தாங்கி வருகின்றன. இதன் அடையாளமாக இன்றைய திருவழிபாடு இளஞ்சிவப்பு நிறத்தைக் கொண்டிருக்கிறது.

இறைவாக்கினர் செப்பானியா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில், "மகளே சீயோன்! மகிழ்ச்சியால் ஆர்ப்பரி; இஸ்ரயேலே! ஆரவாரம் செய்; மகளே எருசலேம்! உன் முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து அக்களி" என்று வாசிக்கின்றோம். பாபிலோனியர் ஆட்சியின் போது அடிமைகளாக வாழ்ந்த யூதர்களை கடவுள் அளிக்கவுள்ள விடுதலையை நோக்கி மகிழ்ச்சிப் பொங்க, அகமகிழ செப்பானியா அழைக்கிறார்.

இஸ்ரயேல் மக்களுக்கு அளித்த அதே வார்த்தைகளைத்தான் இறைவன் இன்றைக்கு நமக்கும் தருகின்றார். ஆகவே, நாம் இறைவன் நம்மோடு இருக்கின்றார், நம்முடைய பாவங்கள், குற்றங்கள் அனைத்தையும் மன்னித்துவிட்டார் என்ற நம்பிக்கையில் நாம் மகிழ்ச்சி கொள்வோம்.

பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில் தூய பவுல், "சகோதர சகோதரிகளே, ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்; மீண்டும் கூறுகின்றேன் மகிழுங்கள்" என்று கூறுகின்றார். ஆண்டவரோடு இணைந்து மகிழுங்கள் என்று சொல்கிற தூய பவுலடியார், ஆண்டவரோடு இணைந்திருக்கின்ற போது மகிழ்ச்சியானது கிடைக்கும் என்று சொல்லாமல் சொல்கின்றார்.

இன்றையக் காலக்கட்டத்தில், நாம் பல சவால்களை எதிர்நோக்கியவாறு, மிகவும் சிரமங்கள்குள்ளாகித் துன்பங்களை அனுபவிக்கிறோம். ஆனால், ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கைதான் நமக்கு வாழ்வளித்துக்கொண்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் யோர்தான் ஆற்றங்கரையில் திருமுழுக்கு கொடுத்துக்கொண்டிருக்கும்போது அவரிடம் வந்த மக்கள், "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கின்றார்கள். அவர்கள் கேட்கின்ற கேள்வியை 'உண்மையான மகிழ்ச்சியைப் பெற நாங்கள் என்ன செய்யவேண்டும்?' என்ற விதத்திலும் புரிந்துகொள்ளலாம். மக்கள் இவ்வாறு கேட்டதற்கு திருமுழுக்கு யோவான் அவர்களிடம், "இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்; உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்" என்கின்றார்.

ஆம், நம்மிடம் இருப்பதை பிறருக்குக் கொடுத்து வாழ்கின்றபோதுதான் உண்மையான மகிழ்ச்சி நம்முடைய உள்ளத்தில் பிறக்கின்றது என்று சொல்லும் இந்த நிகழ்வு நமது சிந்தனைக்குரியதாக இருக்கின்றது.

ஆகவே, அநீதியான செயல்களைப் புறக்கணித்து, அன்பு மற்றும் நீதியின் அடிப்படையிலான நற்செயல்களை செய்ய ஊக்கம் பெறுவோம். ஆண்டவரே வந்தருளும் என முழங்குவோம்.

*-ஆ. லூர்தம்மாள்- காஜாங்.*

**திருவருகைக் காலம் 3-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | செப் 3: 14-17 |
| தி. பாடல்: | எசா 12: 2-3. 4. 5-6 6 |
| 2ம் வாசகம்: | பிலி 4: 4-7 |
| நற்செய்தி: | லூக்கா 3: 10-18 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2
திருப்புகழ் மாலை—வாரம் 3